பல்லாவரம் மாநகராட்சி பள்ளியில் 10- 12 ஆம் வகுப்பில் முதல் 3 இடம் பிடித்த

# மாணவ மாணவிகளுக்கு நிதி உதவி -அரசின் மிதிவண்டிகள்!

## இ. கருணாநிதி எம்.எல்.ஏ. மாணவர்களுக்கு வழங்கினார்!

பல்லவபுரம், ஆக. 17 - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பழைய பல்லாவரம் பொன்னியம்மன் கோவில் தெருவில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

மேலும் பத்தாம் வகுப்பு பன்னிரண்டாம் வகுப்புகளில் பள்ளியிலேயே முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 10,000 ரூபாய், 7000 ரூபாய், 5000. என சொந்த நிதியிலிருந்து மாணவ மாணவி களுக்கு சால்வை அணிவித்து நிதி வழங்கி ஊக்குவித்தார். இந்நிகழ்ச்சியில் மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை தலைமை ஆசிரியர் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் பி. வெங்கடேசன் கோ. ஜானகிராமன் டி. எச். பிரான்செஸ் பால் பெற்றோர்கள் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

ஜி.ஆர்.ராஜேந்திரன் தலைமையில்

# மயிலை மேற்குப் பகுதி கழக ஆலோசனைக் கூட்டம்!

## நந்தனம் கி.மதி எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, ஆக.17- சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி ஆலோசனை கூட்டம் இன்று (17-08-2023) மாலை 6:00 மணியளவில் அவைத் தலைவர் ஜி.ஆர்.ராஜேந்திரன் தலைமையில் பகுதி கழக துணை செயலாளர்கள் ஆர். எல்.வி.அசோக், ப.பாக்கிய தாஸ், அகல்யா விஸ்வநாதன் மற்றும் பகுதி பொருளாளர் ஜி.முருகையன் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொருள்: 20-08-2023 அன்று நடைபெற உள்ள உண்ணாவிரதம் மற்றும் கழக ஆக்க பணிகள்

இடம்: மயிலாப்பூர் சட்ட மன்ற அலுவலக வளாகம்

இவ்வாறு மயிலை மேற்குப் பகுதிச் செயலாளர் நந்தனம் மதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# திருபெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி அறிக்கை!

காஞ்சிபுரம், ஆக். 17 காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருபெரும்புதூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (17.8.2023 வியாழக் கிழமை) காலை 10 மணி அளவில், சுங்குவார்சத்திரம், திருபெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழக அலுவலகத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர், ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.டி.கருணாநிதி தலைமையில் நடைபெற உள்ளது.

அது சமயம் திருபெரும்புதூர் வடக்கு ஒன்றிய கழகத்தில் உள்ள மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

1.நமது காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் வருகை,

2.வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கூட்டம்,

3.தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் குறித்து.

இவ்வாறு திருபெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு அரசு இந்து அறநிலையத்துறை செல்வ விநாயகர் & கோதண்டராமர் திருக்கோயில் மேற்கு தாம்பரத்தில், 76 வது ஆண்டு சுதந்திர தின விழா சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நடைபெற்றது. இந்நிகழ்சியில் மாண்புமிகு தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன், தாம்பரம் மாநகர கழக செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா. கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி பொதுமக்களுடன் சமபந்தி விருந்தில் உணவு அருந்தினார்கள். உடன் 4வது மண்டல குழுத்தலைவர்.டி.காமராஜ் 5வது மண்டல குழு தலைவர்.எஸ். இந்திரன்.மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், திருக்கோயில் நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

திருவொற்றியூர் ஜெய்கோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளியில் 77வது சுதந்திர தினவிழா!

# 10,12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ - மாணவியருக்கு ஊக்கத்தொகை!

## கழக மாநில மீனவர் அணித் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை,ஆக.17- திருவொற்றியூர் ஜெய்கோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளியில் இந்திய திருநாட்டின் 77வது ஆண்டு சுதந்திர தின விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் கோ.பாலாஜி , மாமன்ற உறுப்பினரும் வட்டக் கழக செயலாளருமான கே.பி.சொக்கலிங்கம் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர்.

மாநில மீனவர் அணி துணைத் தலைவரும் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.சங்கர் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு மாணவ - மாணவியருக்கு இனிப்பு வழங்கி சிறப்புரையாற்றினார்.

நடைபெற்று முடிந்த பத்தாம் வகுப்பு, 12ஆம் வகுப்பு பொது தேர்வில் முதல் மூன்று இடங்கள் பிடித்த சரண், விஷ்வா, அக்ஷய், சுஸ்மிதா ஸ்ரீ, மோனிகா ஸ்ரீ, சஹானா, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அறிவியல் பாடத்தில் 100 மதிப்பெண் பெற்ற மாணவர் தினேஷ் ஆகியோருக்கு ஊக்கத் தொகை வழங்கினார்.

மேலும் மலேசியாவில் நடைபெற்ற சிலம்ப விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் சார்பில் கலந்து கொண்டு தங்கம் வென்ற ஒன்பதாம் வகுப்பு மாணவி டி. சாதனாவுக்கும் ஊக்கத் தொகை வழங்கினர்.

நடைபெற்று முடிந்த 10 ஆம் வகுப்பு 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாணவ மாணவிகளை 100% தேர்ச்சி பெற செய்த ஆசிரியர்கள் அனந்த பிரியா, பரிமளா பாத்திமா, ஆதிமந்தி, சாந்தி ஆக்னேஷ், கவிதா ஆகியோருக்கு சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் பாராட்டி சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

முன்னதாக மாணவியரின் தேசபக்தி கொண்ட கலை நிகழ்ச்சிகளையும் சிலம்பம் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் வி.இராமநாதன் , ஆசிரியர்கள் எஸ்.செந்தில்குமார், ஏ.ரோஸ்லின் மேரி, ஏ. ஆரோக்கிய ஜெயசீலீ ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி இரா.வெற்றிச் செல்வி தலைமை உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் ஆர்.விவேகானந்தன், எஸ். டி.சங்கர், எல்லப்பன், பள்ளி மேலாண்மை குழு தலைவர் சுமதி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன், முன்னாள் பகுதி துணை செயலாளர் இ.ரமேஷ், மாமன்ற உறுப்பினர் பானுமதி சந்தர், வட்டக் கழக செயலாளர் ஏகா.கார்த்திகேயன், கே. கார்த்திகேயன், பி.எஸ். சைலஸ் குட்டி என்கின்ற எத்திராஜ், சலீம், பண்ணை சந்திரசேகர், புழல் ஜெகதீசன், பால உமாபதி, பிரட் சுரேஷ்,விமல் தாஸ், தயாநிதி, கே.தேசிங்கு திருவொற்றியூர் குப்பம் ரமேஷ், எஸ்.செல்வம்,டைலர் மணி, மணலி குமார், குமரன், கார்கில் நகர் கஜா, எர்ணாவூர் சௌந்தர், இப்ராஹிம் பாய், சின்ன எர்னாவூர் கோவிந்தராஜ், பாட்ஷா, அனிதா, மிக்சர் கார்த்தி, கிறிஸ்டோபர், ராயப்பன், போட்டோ செந்தில், ஐந்தாவது வட்ட நிர்வாகிகள் கே.ரமேஷ், காந்திநகர் செல்வம், ராஜவேல், சுப்பிரமணி, ஜபா லோகநாதன், ரமேஷ், நெய்தல் நகர் ஜோதி, சண்முகசுந்தரம், கோபி, நகர் ரமேஷ், சங்கர், ஸ்ரீகாந்த், அன்புச்செல்வன், கபடி குமார், ஆரிப், தீனதயாளன், பிரவீன், சீதாராமன், ஃபாரூக், வசந்த், சிங்காரம், ரவி, ரமேஷ், மற்றும் கழகத் தோழர்கள், ஆசிரியர்கள் பொதுமக்கள் மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

உதவி தலைமை ஆசிரியர் ஆ.சாந்தி ஆகனஸ் நன்றி கூறினார்.



பல்லாவரம் மாநகராட்சி பள்ளியில் பத்து மற்றும் 12 ஆம் வகுப்பில் முதல் 3 இடம் பிடித்த மாணவ மாணவிகளுக்கு இ. கருணாநிதி எம்.எல்.ஏ. நிதி உதவியும், தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளையும் மாணவர்களுக்கு வழங்கினார் . உடன் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, தலைமை ஆசிரியர், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் பி.வெங்கடேசன், கோ. ஜானகிராமன், டி.எச். பிரான்சிஸ் பால் பெற்றோர்கள் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்




திருவொற்றியூர் ஜெய்கோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற 77வது ஆண்டு சுதந்திர தின விழாவில் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் கலந்துகொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ – மாணவியருக்கு ரூபாய் 50,000 ஊக்கத்தொகை வழங்கினார். இதில் ஆசிரியப் பெருமக்கள், கழகத்தினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





